விஜய் கூட்டத்தின் பொய்களை, த.வெ.க ஆட்சியே நொறுக்கிவிட்டது!

தனது கட்சிக்குக் கொள்கைத் தலைவர்கள் என்று 5 பேரை அறிவித்தார் விஜய். ஆனால், அவர்களுக்கும் அந்தத் தலைவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அவர்களைப் பற்றி அவருக்கும் எதுவும் தெரியாது. அவருடைய ரசிகர்களுக்கும் தெரியாது. விஜய்க்கும் அவரது கூட்டத்திற்கும் தெரிந்தது பொய்.. பொய்.. பொய்.. அந்தப் பொய்களைப் பரப்புவதுதான் அவர்களின் ஒரே கொள்கை.

2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே த.வெ.க. என்ற கட்சியைத் தொடங்குவதாக அறிவித்த விஜய், நாடாளுமன்றத் தேர்தலில் பங்கெடுக்காமல், அதைத் திட்டமிட்டு தவிர்த்து விட்டு, சட்டமன்றத் தேர்தலில் தன் கட்சியைப் பங்கெடுக்கச் செய்தார். அதற்குக் காரணம், இப்போதும் அவரது ஆட்சியைத் தன் விருப்பப்படி இழுத்துப் பிடிக்கும் டெல்லி பா.ஜ.க.வின் உத்தரவுப்படிதான்! ஆனால், இது வெளிப்படையாக வெளியே தெரிந்து விடக் கூடாது என்பதற்காக, 'த.வெ.க.வின் கொள்கை எதிரி பா.ஜ.க.' என்று பேசினார். பேசியது மட்டும்தான். செயலில் கொள்கை எதிரியை விமர்சிக்கவில்லை. ஏன், 'பா.ஜ.க.' என்ற பெயரைக் கூட உச்சரிப்பதற்கு இன்று வரை தொடைநடுங்கும் கட்சியாக த.வெ.க இருக்கிறது. கொள்கை எதிரியை விமர்சிக்க மாட்டோம்அந்தக் கட்சியின் பெயரையே சொல்ல மாட்டோம் என்பதுதான் த.வெ.க.வின் கொள்கையாக உள்ளது.

பாசிசமா? பாயாசமா? என்று பா.ஜ.க.வின் ஜனநாயக விரோதச் செயல்பாடுகளை எளிதாகக் கடந்து சென்ற விஜய்யின் நோக்கம், தி.மு.க.வை நோக்கிப் பொய்களைப் பரப்புவதும், அதனை தன் ரசிகர் கூட்டத்தின் மூலமாக சமூக வலைத்தளங்களில் பரப்புவதும், அதற்காகவே இரண்டு மூன்று நிறுவனங்களை வைத்திருப்பதும்தான். 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அவர் பரப்புரை செய்த விரல் விட்டு எண்ணக் கூடிய ஊர்களில் தி.மு.க. வுக்கு எதிராக மட்டுமே பேசினார். அதுவும் பொய்ப் பொய்யாகப் பேசினார்.

தி.முக. ஆட்சியில் சட்டம்ஒழுங்கு கெட்டுவிட்டதாக ஆதாரமின்றி விஜய் பேசியதை அவரது 'விர்ச்சுவல் வாரியர்ஸ்' எனப்படும் சமூகவலைதளக் கூட்டம் வகைதொகையில்லாமல் பரப்பியது. பெண்களுக்குத் தமிழ்நாட்டில் பாதுகாப்பிலை என்றும், நடமாடவே முடியவில்லை என்றும் விஜய் அடுத்தடுத்தப் பொய்களை அவிழ்த்துவிட அதையும் பரப்பியது அவரது கூட்டம். **இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய முதல் 10 நகரங்களில் 6 நகரங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன என்கிற ஆய்வறிக்கைகளுக்கு மாறாக, விஜய்யின் பொய் அறிக்கை பரப்பப்பட்டது.**

எல்லாவற்றுக்கும் மேலாக, கரூரில் தன்னைப் பார்க்க வந்து கூட்ட நெரிசலில் 41 உயிர்கள் பலியானதற்குக்கூட பொறுப்பேற்காமல் தி.மு.க. மீது பழியைப் போட்டார் விஜய். அத்துடன், பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கத்தை எட்டிய இந்தியாவின் ஒரே மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிக் காட்டிய திராவிட மாடல் ஆட்சியின் மீது, கடன் சுமையை ஏற்றி வைத்த அரசு என்ற அவதூறை விஜய்யும் அவரது கூட்டமும் திட்டமிட்டே பரப்பினர்.

"தமிழ்நாடு அரசின் கடன் வாங்கும் எல்லை எதுவரை உள்ளது, அதில் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வாங்கிய கடன் அந்த எல்லைக்குட்பட்டு இருந்ததா? எல்லையைத் தாண்டி இருந்ததா? மாநில அரசின் நிர்வாகத்திற்காக வாங்கப்பட்ட கடன் தொகை எவற்றில் முதலீடு செய்யப்பட்டது? அது என்னென்ன வகையில் மக்களுக்குப் பயன் தரும் திட்டங்களாக மாறின?" என்பவை அனைத்தும் வெளிப்படையாகவே உள்ளன. அப்படி இருந்தும், விஜய் கூட்டம் கடன் சுமை பற்றிய பொய்யை மட்டுமே பரப்பியது.

முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட விழா மேடையிலும் கடன் பாட்டுதான் பாடினார் விஜய். "பத்தரை இலட்சம் கோடி கடனை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்" என்று தி.மு.க. அரசு மீது குற்றம் சாட்டினார். அது குற்றச்சாட்டு மட்டுமல்ல,

தன் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தவர்களை ஏமாற்றுவதற்கான அடையாளச் சீட்டு. அவர் அள்ளிவிட்ட வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றப் போவதில்லை என்பதை, சொல்லாமல் சொல்லித் தப்பிப்பதற்கான காரணம்தான் அது. அன்றே நம் திராவிட நாயகரான கழகத் தலைவர், "தமிழ்நாடு அரசிடம் போதுமான அளவில் பணம் உள்ளது, திட்டங்களை நிறைவேற்ற மனம்தான் வேண்டும்" என்று நெற்றிப் பொட்டில் அடிப்பது போல தன் கருத்தைப் பதிவிட்டார்.

இந்தியாவில் எந்த மாநிலமும் கடன் வாங்காதது போலவும், இந்திய ஒன்றிய அரசும் கடனே இல்லாமல் திட்டங்களைத் தீட்டுவது போலவும், தமிழ்நாட்டை 5 ஆண்டுகள் ஆட்சி செய்த 'திராவிட நாயகர்' தலைமையிலான தி.மு.க ஆட்சிதான் இவ்வளவு கடனை வாங்கி வைத்தது போலவும், த.வெ.க ஆட்சியில் கடன் இல்லாமல் கஜானாவில் பணத்தை நிரப்பி வைத்துவிடுவது போலவும் பாவ்லா செய்தது விஜய் கூட்டம். அதுமட்டுமல்ல, தமிழ்நாடு அரசின் கடன் தொகையான பத்தரை இலட்சம் கோடி ரூபாயை மாநிலத்தின் மக்கள் தொகை எண்ணிக்கைக்கேற்ப பிரித்து, ஒவ்வொருவர் தலையிலும் ஏறத்தாழ 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கடனை தி.மு.க. அரசு ஏற்றி வைத்திருக்கிறது என்று த.வெ.க.வின் பொய் உற்பத்தி நிறுவனங்கள் தொடர்ந்து பரப்பி வந்தன.

பிறக்கப் போகும் குழந்தையின் பிஞ்சுத் தலையிலும் 1,25,000 ரூபாய் கடன் என்பது போல 'மீம்ஸ்' போட்டு விமர்சித்தார்கள். தங்களை அறிவாளிகள் போல நினைத்துக் கொள்ளும் கோமாளிக் கூட்டத்தில் முற்றிப் போன சிலர், இந்தத் தொகைக்கான காசோலை அல்லது வரைவேலையை அமைச்சர்களிடம் கொடுப்பது போலவும், அரசுக்கு அனுப்பி வைப்பது போலவும் ரீல்ஸ் போட்டு, "என் கடனை நான் அடைத்துவிட்டேன்" என்று கிச்சுமூச்சு மூட்டினார்கள்.

கோவி.லெனின்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

இப்படியெல்லாம் ஒரு மாநிலத்தின் கடனை அடைக்க முடியாது என்பதை உணர்ந்தவர்களான உண்மையான பொருளாதார வல்லுநர்கள், த.வெ.க ஆட்சியால் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் அவல நிலையைக் கண்டு பதறினார்கள். விஜய் நடித்த 'தமிழன்' என்ற படத்தில், நாட்டின் கடனில் ஒரு குடிமகன் தன் பங்கை அடைப்பது போல ஒரு காட்சி உள்ளது.

சினிமாவை நம்பி வாக்களித்தவர்கள், சினிமா காட்சி போலவே செயல்பட முனைந்திருக் கிறார்கள். இவ்வளவுதான் விஜய் கூட்டத்தின் பொருளாதார அறிவு.

ஆட்சியைப் பிடிப்பதற்கு த.வெ.க.வினர் என்னென்ன பொய்களைத் திட்டமிட்டு, கட்டமைப்புடன் பரப்பினார்களோ, எத்தகைய சதிக்கோட்பாடுகளை உருவாக்கினார்களோ, அவையனைத்தும் அவர்கள் ஆட்சியில் அவர்களையே திருப்பித் தாக்குகிறது. 'கட்டி வைத்த பொய்க் கோட்டைகள்' தகர்ந்து தரைமட்டமாகின்றன.

தி.மு.க ஆட்சியில் பார்ட்டி ஃபண்ட் என 30% வசூலிக்கப்பட்டதாகவும், அதைத் தவிர்த்தாலே தங்கள் வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றி விட முடியும் என்றும் விஜய் தொடங்கி, அவரை மிஞ்சிய அவருடைய அமைச்சரவை சகாக்கள் கூவிக்கொண்டே இருந்தனர். அரசு வழக்கறிஞர்கள் நியமனம், குவாரிகளில் ஆய்வு என்ற பெயரில் வசூல், செங்கல் சூளை, வாரச்சந்தை வரை விட்டு வைக்காத த.வெ.கவினரின் மாமூல் என எல்லாப் பக்கமும் இந்த ஆட்சியில் பார்ட்டி ஃபண்ட்தான். இவை குறித்து சொந்தக் கட்சிக்காரர்களே புகார் செய்தும் நடவடிக்கை இல்லை. தி.மு.க ஆட்சி குறித்த த.வெ.கவின் விமர்சனத்தில் உண்மை இருந்திருந்தால், முதல் பட்ஜெட்டிலேயே உபரி வருவாயைப் பெருக்கி வாக்குறுதிகளை நிறைவேற்றியிருக்கலாமே? ஏன் செய்ய முடியவில்லை?

த.வெ.க அரசின் முதல் பட்ஜெட்டில் உள்ள வருவாய்ப் பற்றாக்குறையை சமாளிக்க ஏறத்தாழ 1இலட்சத்து 73ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கப் போவதும் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டுள்ளது.

விஜய் அளித்த வாக்குறுதிகளான ஆண்டுக்கு 6 சிலிண்டர், மகளிருக்கு மாதம் 2500 ரூபாய், மாநிலம் முழுவதும் மகளிருக்கான இலவச பஸ் பயணம், பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் 4000 ரூபாய், முழுமையான பயிர்க் கடன் ரத்து உள்ளிட்ட எதுவுமே பட்ஜெட்டில் இடம்பெறாத நிலையில் எதற்காக புதிதாக 1 இலட்சத்து 73ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்க வேண்டும்?

கடந்த 20 ஆண்டுகளில் பள்ளிக்கல்விக்கான நிதி குறைக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் முறை. தி.மு.க அரசின் 2026ஆம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 4 ஆயிரம் கோடி ரூபாய் த.வெ.க.வின் பட்ஜெட்டில் குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சியின் உபரியாக மதிப்பீடு செய்து கூடுதல் நிதி ஒதுக்கியதாகவும், தற்போது சரியான மதிப்பீட்டுடன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் இந்தக் குறைவான ஒதுக்கீடு சரிதான் என்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் வியாக்யானம் செய்திருக்கிறார். கல்வித் துறை போல மேலும் சில துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு குறைந்துள்ளது.

முறையான மதிப்பீட்டின் அடிப்படையில் நிதியைக் குறைத்து ஒதுக்கினால் எதற்காக 1 இலட்சத்து 73ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்க வேண்டும்? யாருடைய இலாபத்திற்காக கடன் வாங்குகிறது த.வெ.க அரசு? இந்தக் கூடுதல் கடன் தொகையை 'தாய்மாமன் சீர்' மோதிரம் திட்டத்தில் பயன் பெறும் மற்றும் பயன்பெற முடியாத அனைத்துக் குழந்தைகளின் தலையிலும் ஏற்றுகிறதா விஜய் அரசு?

மாநில அரசின் கடன் பற்றி எந்த நிர்வாக அறிவுமின்றி, தனக்காகக் கூடும் கூட்டத்தை உணர்ச்சிவசப்படுத்துவதற்காக தி.மு.க ஆட்சி மீதான பொய்களைக் கட்டமைத்தது விஜய்யும் அவர் கூட்டமும். இப்போது அவர் தலைமையிலான த.வெ.க அரசே அந்த பொய்களைத் தகர்ப்பதைக் கண்கூடாகப் பார்க்கும் காலம் அமைந்துள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் வெள்ளை அறிக்கை என்ற அரைகுறை அறிக்கையை வெளியிட்டு புதிய பொய்களைக் கட்டமைத்தார். ஆனால், 2026 இடைக்கால பட்ஜெட்டுக்கு முன்பாக **தி.மு.க அரசு வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கை தான் தமிழ்நாட்டின் நிர்வாகத்திற்கான ஆதார ஆவணமாக நிலைத்து நிற்கிறது.**

த.வெ.க அரசின் வெள்ளை அறிக்கை வெளியான நாளிலேயே திராவிட மாடல் ஆட்சியில் நிதியமைச்சராகப் பொறுப்பேற்று சிறப்பாகச் செயல்பட்ட தங்கம் தென்னரசு அவர்கள் ஊடகத்தினரைச் சந்தித்து, "இது வெள்ளை அறிக்கையல்ல, வெற்று அறிக்கைதான் என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்ததுடன், த.வெ.க ஆட்சி ஒருவேளை 5 ஆண்டுகளை நிறைவு செய்தால் அப்போது, தமிழ்நாடு அரசின் கடன் தொகை தற்போதுள்ளதைவிட இரு மடங்கு இருக்கும் என்று அறைகூவல் விடுத்துச் சொன்னார்.

பதவியேற்ற நாளில் அவர் பேசிய 'பஞ்ச் டயலாக்' என்பது, தன்னை நம்பிய கூட்டத்தின் முன் அவர் போட்ட வெற்றுக் கூச்சல் என்பது நிரூபணமாகிவிட்டது. விஜய் கூட்டம் கட்டமைத்த அத்தனை பொய்களும் த.வெ.க.வின் சொற்ப ஆட்சிக்காலத்திற்குள்ளாகவே நொறுங்கி விழப் போவதை விஜய் பார்க்கத்தான் போகிறார்.

தமிழ்நாட்டை ஆட்சி செய்த எந்த முதலமைச்சரும் ஒரே ஆண்டில் இந்த அளவு கடன் வாங்கவில்லை என்கிற வகையில் வரலாற்றுச் சாதனை மிக்க கடன் தொகையை மாநிலத்தின் மீது ஏற்றியிருக்கிறார் விஜய்.

பா.ஜ.க.விற்குத் துணைபோகும் த.வெ.க., தொகுதி மறுவரையறைக்காக

எம்.பி. க்கள் கூட்டத்தைக் கூட்டுவது கபட நாடகம்!

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை, ஆக.9

முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது :-

தமிழக சட்டமன்றத் தேர்தல் நடந்த போது நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டி கொல்லைப்புறமாக தொகுதி மறுவரையறை மசோதாவை நிறைவேற்ற பா.ஜ.க. முனைந்த போது 5 மாநில முதலமைச்சர்கள் மற்றும் தேசிய மாநில அளவிலான எதிர்க்கட்சியினரை ஒன்றிணைத்து அந்த மசோதாவை வீழ்த்தி பிரதமர் மோடிக்கு தோல்வியை பரிசாக கொடுத்த தமிழக உரிமையை காத்தவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அந்த நேரத்தில் தனது எஜமான் பா.ஜ.க.வுக்கு பயந்து ஒதுங்கி ஒளிந்து தொகுதி மறுவரையறை குறித்து எந்த கருத்தும் சொல்லாத விஜய் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டுவதாக அறிவித்திருப்பது சாத்தான் வேதம் ஓதுவது போல் உள்ளது.நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எந்த பிரதிநிதித்துவமும் இல்லாத த.வெ.க.கட்சிக்கு,ஒரு எம்.பி.க்குரிய வாய்ப்பு வந்தபோது காங்கிரஸில் இருந்து கொண்டு தி.மு.க.வுக்கு துரோகம் செய்தவருக்கு அதை வழங்கிவிட்டு தானோ தன் கட்சி உறுப்பினர்களோ பாராளுமன்றம் சென்று பா.ஜ.க.வை சந்திக்க திராணி யில்லாத உங்கள் வீரம் தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியாதா? CMSIR?

காவிரி பிரச்சினை,தமிழ்த்தாய் வாழ்த்து, 100 நாள் வேலைத்திட்டம,FCRA, இந்திசமஸ்கிருதத்திற்கு ஆதரவு ஆகிய பிரச்சினைகளில் பா.ஜ.க.விற்கு துணை போகும் நீங்கள்.தற்போது உங்கள் ஆட்சியை தக்க வைத்து வரும் காங்கிரஸ்க்கு துணைசெல்ல எம்.பி.க்கள் கூட்டம் என்ற உங்கள் கபட நாடகம் தமிழ்நாட்டுக்கு தெரியாதா? CMSIR?

சிங்கம் போல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஐந்தாண்டு கால தி.மு.க. ஆட்சியில் தமிழக உரிமையையும்,தமிழக மக்களையும் எவ்வாறு பாதுகாத்தாரோ அதுபோல் தொகுதி மறுவரையறையிலும் முடிவெடுப்பார்.

தற்போது தமிழ்நாட்டின் நடக்கும் ஆட்சியைப் பார்த்தால் எனக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது ராஜா வேஷம் போட்டாலும் கோமாளி, கோமாளி தான்.

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு பாரிவாக்கத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் உடன் முன்னாள் எம்.எல்.ஏ ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, எம்.முத்தமிழச்செல்வன், வி.குமார், ஏ.ஜனார்த்தன், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், க.பரிமேலழகன், கே.விக்னேஷ், வி.தணிகாசலம், டி.குமரேசன், என்.சண்முகம், எம்.ராம்பாபு, டி.திருமலைராஜ், கே.கேசவன், வெங்கடேசன், திருலோகசுந்தர், ஜெ.டி.அருண், சுமதி அத்திகிரி, வின்செண்ட், உண்ணாமாலை, டி.துரைமுருகன், வி.லிங்கேஷ், எம்.கே.பி.பாபு,ஜெகன், புருஷோத்தமன், குமார், ஏசய்யா, சுரேஷ், சுரேந்தர் உள்பட திமுக நிர்வாகிகள் உள்ளனர்

பூந்தமல்லி நகராட்சி வளர்ச்சியை முடக்கும் அதிகாரிகள்!

திருவள்ளூர், ஆக 09;

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி நகராட்சியில் வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து மந்தமடைந்து வருவதற்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையே முக்கியக் காரணம் என்றும், த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளில் தேவையற்ற தலையீடு அதிகரித்துள்ளதாகவும் நகர்மன்றக் கூட்டத்தில் திமுகவைச் சேர்ந்த உறுப்பினர்கள் கடும் அதிருப்தி தெரிவித்தனர்.

நகர்மன்றக் கூட்டத்தில் பேசிய உறுப்பினர்கள், பூந்தமல்லி நகர்மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் பெரும்பாலான கவுன்சிலர்கள் மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றாலும், மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கான நிர்வாக ஒத்துழைப்பை அதிகாரிகள் வழங்கத் தவறி வருவதாக குற்றம்சாட்டினர். இதன் விளைவாக குடிநீர் வழங்கல், சாலை மேம்பாடு, மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், துப்புரவுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலப் பணிகள் திட்டமிட்ட வேகத்தில் நடைபெறாமல் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் நகராட்சியில் அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றும், நகர்மன்றக் கூட்டங்களில் முக்கிய அதிகாரிகள் தொடர்ந்து பங்கேற்காதது நிர்வாக அலட்சியத்தை வெளிப்படுத்து வதாகவும் உறுப்பினர்கள் விமர்சித்த னர். மக்கள் முன்வைக்கும் அன்றாட பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டிய நிலையில், அதிகாரிகளின் இந்த அணுகுமுறை உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை பாதிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, திமுக நிர்வாகம் உள்ள நகராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள் திட்டமிட்டு தாமதப்படுத்தப்படுகின்றன என்ற சந்தேகம் பொதுமக்களிடையே எழுந்துள்ளதாகவும், இதுபோன்ற நிலை தொடர்ந்தால் மக்களே நேரடியாக பாதிக்கப்படுவார்கள் என்றும் உறுப்பினர்கள் கூறினர். அரசியல் வேறுபாடுகளை காரணமாகக் கொண்டு உள்ளாட்சி நிர்வாகத்தின் செயல்பாடுகள் பாதிக்கப்படக் கூடாது; மக்களின் நலனே முதன்மையாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

முதல்வர் விஜய் ஆட்சியில்

நகராட்சி நிர்வாகத் துறையில் 'டெண்டர்' ரத்திலும் முறைகேடு!

10 சதவிகிதம் கமிஷன் கேட்கும் அமைச்சர்கள்!

சென்னை, ஆக. 9-

நகராட்சி நிர்வாகத் துறையில், 'டெண்டர்' வழிமுறைகளில், உள் ளூர் அமைச்சர்கள் தலையிடுவதால் முறைகேடு நடப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து 'தினமலர்' 8.8.2026 தேதியிட்ட இதழில் வெளிவந்த செய்தி வருமாறு:-

முதல்வர் விஜய் தலைமை யிலான கூட்டணி ஆட்சி அமைந்த பின், 2,300க்கும் அதிகமான, 'டெண்டர்' கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. பணிகளுக்கான செலவை விட, பல மடங்கு கூடுதல் விலைப்புள்ளி கோரப்பட்டதால், டெண் டர்கள் ரத்து செய்யப் பட்டதாக கூறப்பட்டது.

இந்நிலையில், முதல்வர் விஜய் வசம் உள்ள நகராட்சி நிர்வாக துறையில், உள்ளூர் அமைச்சர்கள் தலையீட்டால், குறைந்த விலைப்புள்ளி கோரிய டெண்டர்களும் ரத்து செய்யப் பட்டுள்ள தாக புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து, நகராட்சி நிர்வாகத் துறை அதிகாரிகள் சிலர் கூறியதாவது:

அரசு நிர்ணயம் செய்யும் விலையை விட, மிக குறைவான விலைப்புள்ளியை தான் ஒப்பந்ததாரர்கள் போடுகின்றனர். குறிப்பாக, முதல்வர் விஜய் கையில் இருக்கும் நகராட்சி நிர்வாக துறையில் விலைப்புள்ளிகள் ரொம்பவே குறைந்துள்ளன.

ஆனால், துறைக்கென தனி அமைச்சர் இல்லாததால், உள்ளூர் அமைச்சர்கள் தலையீடு அதிகமாகி, 10 சதவீதம் வரை கமிஷன் கேட்க தொடங்கி உள்ளனர். குறிப்பாக, ஈரோடு மாநகராட்சியில், எல்.இ.டி., பல்பு அமைப்பதற்கான டெண்டர், கடந்த ஜூலை மாதம் வெளியானது.

அதில், அரசு நிர்ணயம் செய்த விலையை விட, 25 சதவீதத்துக்கும் குறைவான விலையை கோரிய நிறுவனம் தேர்வானது.

ஆனால், அந்த நிறுவனத்துக்கு பணி ஆணை வழங்கவில்லை. மாறாக, உள்ளூர் அமைச்சரின் இரு சகோதரர்கள் நிறுவனத்தை அணுகி, 10 சதவீதம் கமிஷன் கேட்டுள்ளனர்.

இதற்கு மறுப்பு தெரிவித்ததால், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொறியியல் கையேட்டில் உள்ள நியாயமற்ற குறைந்த விகிதம் என்ற விதியை பயன்படுத்தி, டெண்டர் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அதே ஈரோடு மாநகராட்சியில், கட்டுமான பணிக்கான டெண்டர் களில், 25 சதவீதத்துக்கும் குறைவான விலைப் புள்ளி கோரிய நிறுவனத்திடம் இருந்து, 10 சதவீத கமிஷன் பெற்று, பணி ஆணை கொடுக்கப்பட்டுள்ளது.

த.வெ.க., ஆட்சியில் டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டால், அதில் முறைகேடு நடந்திருப்பதாக காரணம் சொல்லப்படுகிறது.

இதை கேடயமாக பயன்படுத்தியே, தாம்பரம், திருப்பூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் உள்ளூர் அமைச்சர்களும், ஆளும் கட்சியினரும் தலையிட்டு, கமிஷன் கேட்க தொடங்கி உள்ளனர்.

லஞ்ச வழக்குக்கு பயந்து, அதிகாரிகள் இப்போது தான் கொஞ்சம் மாறி வந்தனர். ஆனால், அமைச்சர்கள் கொடுக்கும் தைரியத்தால், உள்ளூர் அதிகாரிகளும் முறைகேட்டில் ஈடுபட தொடங்கி உள்ளனர்.

இவ்வாறு கூறினர் என்று 'தினமலர்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.